அ 31

மரங்களின் உலகம்



நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா



1977 (1898)

© ரஸ்கின் பாண்ட்

ரூ. 1.50

THE WORLD OF TREES (TAMIL)

விநியோகிப்பாளர் :

பாரி நிலையம்

1/59, பிராட்வே, சென்னை-600 001

PUBLISHED BY THE DIRECTOR, NATIONAL BOOK TRUST INDIA, A-5, GREEN PARK, NEW DELHI - 110016 AND PRINTED AT JANATHA PRESS, 94-B, PETERS ROAD, MADRAS-600014. COVER AND ILLUSTRATIONS PRINTED AT VAKIL & SONS PRIVATE LIMITED, BOMBAY-400038.

நேரு பால புத்தகாலயம்—28

மரங்களின் உலகம்

CRTPM LIBRARY
MADURAI KAMARAJ UNIVERSITY

ரஸ்கின் பாண்ட்

ஓவியங்கள் :
சித்தார்த்த பானர்ஜீ

தமிழாக்கம் :
ஸி. ராஜப்பா

நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா, புது டில்லி

வலுமிக்க ஆலமரம்

உயர்ந்த மனிதர்கள் இனிய சுபாவமிகுந்தவர்கள் என்பது போல், உருவில் பெரிதான மரங்கள் மனிதர்களின் சிறந்த நண்பர்கள். ஆலமரம் மரங்களில் பெரியது; மனிதனின் மிகச் சிறந்த நண்பனும் கூட.

இப்போதெல்லாம் ஆலமரங்களை அதிகமாக நாம் நகர்ப்புறங்களில் பார்க்க முடிவதில்லை. மிகப் பரந்த இடத்தை இம்மரம் அடைத்துக் கொள்வதால், நாம் வாழவே இட நெருக்கடி ஏற்பட்டுள்ள இக் காலத்தில் ஆலமரம் வளர இடம் கிடைப்பது கடினம்தான். ஒரு பெரிய ஆலமரம் அடைத்துக்கொள்ளும் இடத்தில் ஒரு மூன்று மாடிக்கட்டிடமே கட்டி விடலாம்! இருந்தாலும் அநேக பூங்காக்களில் ஆலமரங்களை வளர்க்கிறார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் குறைந்தது ஒரு ஆலமரமாவது இருக்கும்.

ஆலமரத்தின் கிளைகளிலிருந்து தோன்றும் விழுதுகள் பூமியைத் தொட்டு, அவை தனிமரம் போல் வேரூன்றி, மறுபடியும் அந்த விழுதுகளின் கிளைகள் தனியே வளர்ந்து, படர்ந்து விழுதுவிட்டு தனிமரம் போல் வளர்ந்து, சிறிய ஆலமரக் காடாக மாறுகிறது. சிவபிரானின் ஜடாமுடிக்கு ஒப்பாக அதனால்தான் ஆலமரத்தைக் குறிப்பிட்டார்கள் போலும்!



ஒரு பெரிய மாளிகையை அதன் தூண்கள் தாங்கியிருப்பதைப்போல் ஆலமரத்தின் விழுதுகள் அதைத் தாங்கி நிற்கின்றன. விழுதுகளை வெட்டினால் இம்மரம் பூமியில் தனித்து நிற்க முடியாது. ஏனென்றால் இதன் அடிமரவேர் பூமியில் அதிக ஆழம் செல்வதில்லை. சிறு தோட்டங்களிலோ போக்குவரத்து மிகுந்த சாலை ஓரங்களிலோ இதனால் ஆலமரத்தை வளர்க்க முடிவதில்லை. வீட்டின் அருகிலும் இதை வளர்ப்பது சரியல்ல; ஏனென்றால் இதன் கிளைகள் வசதியாகப்படர்ந்து ஒரு நாள் வீட்டினுள்ளேயே வந்து விடும்.

அடர்த்தியான இலைகளுடன் கூடிய ஆலமரம் எப்போதும் குளிர் நிழலைத்தருகிறது. இதன் மீது சுலபமாக ஏறலாம். கீழே விழுந்து விடுவோமோ என்ற பயம் தேவையில்லை. உட்கார்ந்துகொள்ள வசதியாக உள்ள மரங்களில் இதுவும் ஒன்று. இதன் அடர்ந்த இலைகள் தரும் மறைவு காரணமாக, இதன் அடிமரத்தில் சாய்ந்துகொண்டு அமைதியாக எவ்விதத்தடையும் ஏற்படாமல் படித்து மகிழலாம்.

வந்தவரை வரவேற்று, நிழல் தந்து உபசரிக்கும் தன்மையுடையது ஆலமரம். சிறுவர், சிறுமியர் தவிர, பறவைகள் அணில், வௌவால், பலவித பூச்சிகள் ஆகியவற்றையும் ஆலமரம் கவர்கின்றது. அவை இதன் கிளைகளில் கூடுகட்டியும், இதன் பொந்துகளில் பதுங்கி வாழ்ந்தும் வருகின்றன. அவற்றுக்கும் ஆலமரம் இனிய நண்பனாக இருக்கிறது. அடர்த்தியான இலைகளடர்ந்த மரம் ஆனதால் ஆபத்தின்றி மறைந்து வாழ பறவைகளும் இந்த மரத்தை நாடுகின்றன.

பெரிய விடுதிகளில் தங்குவோர் அடுத்தடுத்த அறைகளில் வாழ்ந்தாலும், ஒருவரால் மற்றவருக்குத் தொல்லை ஏற்படாமல் வாழ்கிறார்கள். அதைப்போல் ஆலமரத்தில் கூடுகட்டி வாழும் உயிர்ப் பிராணிகளும் ஒன்றினால் மற்றொன்றுக்குத் தொல்லை ஏற்படாதபடி தனித்து வாழ முடிகிறது.

ஆலமரத்தின் இளந்தளிர்களை செஞ்சிவப்பு நிறமான பட்டாம்பூச்சிகள் நாடி வந்து, பத்திரமாக, பாதுகாப்பாக இருக்





கும்படி தம் முட்டைகளை இட்டுச் செல்கின்றன. இதன் இலைகளின்மேல் படிந்துள்ள சுவையோடு கூடிய திரவத்தை ருசி பார்க்க அணில்கள் குதித்துக் கொண்டு ஓடி வருகின்றன.

கோடை வந்ததும் குயில் பறவை ஓயாமல் இன்குரலில் கூவிக்கொண்டே ஆலமர நிழலை நாடி ஆர்வமுடன் பறந்து வரும். இரவில் கூட 'கூ கூ' என்ற இதன் ஓயாத கூவல் நம்மைத் தூங்க விடாது. இதன் கூவலுக்கு "மழை வருகிறது மழை வருகிறது" என்று பொருள் படுத்தி மகாராஷ்டிரர்கள் இந்தப் பறவையை பாஸ் ஆலா என்று கூறுவார்கள். ஆனால் தூக்கம் கலைந்த ஆங்கிலேயர் ஒருவர் இந்தப் பறவை கூடு காரணமாக, "என்ன வெயில்! என்ன கொடுமை! எங்களால் தாங்க முடியவில்லையே!" என்று தான் கூவுகிறதெனக் கூறினர். அதனால் இதற்கு 'மூளைக் கொதிப்படைந்த பறவை' என்று அவர் பெயரிட்டார்.

பருவ மழை தொடங்கியவுடன் பச்சைப் பசேலென்ற இலைகளுடன் ஆல மரம் புத்துயிர் பெற்று இரத்தச் சிவப்பு நிறப் பழங்களுடன் காட்சி தரும். இதன் பழங்களில் நிறைய புழுக்கள் இருப்பதால் நாம் அவற்றை விரும்புவதில்லை. ஆனால் "புல் புல்" பறவைகளுக்கும், க்ரீச், க்ரீச் என்று ஒன்றுக் கொன்று சண்டையிடும் மைனாக்களுக்கும், அருவருப்பான குரலில் கூவி அமைதியைக் குலைக்கும் காகங்களுக்கும் இந்தப் பழங்கள் மிகச் சிறந்த விருந்தாகும். இருள் சூழ்ந்ததும் இம் மரத்தில் வாழும் பறவைகள் தங்கள் கூட்டில் அடைந்தவுடன் கருநிறப் பழந்தின்னி வௌவால்கள் படபட வென்று சிறகடித்துப் பறந்து இதன் பழங்களைச் சுவைத்துத்தின்னும். ஆல மரம் அத்திமர வகையைச் சேர்ந்தது, புனிதமாகக் கருதப் படுவது. அலஹாபாத் திரிவேணி சங்கமத்திலுள்ள சாகாவரம்





பெற்ற ''அக்ஷய வதா'' என்ற ஆல மரம் பற்றிப் பல புராணக் கதைகள் உண்டு. இன்னும் பல்லாயிரக் கணக்கான யாத்திரிகர்களை இது கவர்கின்றது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக இந்தியாவிற்கு விஜயம் செய்த சீன யாத்திரிகர் யுவான் சுவாங் முதன் முறையாக இதன் சிறப்பை விவரித்துள்ளார்.

மூன்று புனித மரங்கள் என்று கருதப் படும் ஆல், அரசு வேம்பு இவற்றை ஒருங்கிணைத்து ஒன்றுக வளர்ப்பது ஸ்ரீ ஹரிக்கு ஆசனமாக அமைகிறது என்ற கருத்தில் ஹர சங்கரி' என்று அழைக்கப் படுகிறது.



ஆலமரத்திற்கு ஆங்கிலத்தில் "பானியன் ட்ரீ" என்று எப்படிப் பெயர் வந்தது? ஹிந்தியில் பார் என்றும் தமிழில் ஆலமரம் என்று சொல்கிறார்களே! ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்கு முதலில் வந்தபொழுது, பனியாக்கள் என்று அழைக்கப்படும் இந்திய வணிக சமூகத்தினர் இம்மரத்தின் அடியில் தங்கி வழிபாடு செய்வதையும், வாணிபம் செய்வதையும் கண்டார்கள். வியாபாரிகளை 'பனியா' என்று அழைப்பதால் இம்மரத்திற்கு அதே பெயரின் அடிப்படையில் "பானியன் ட்ரீ" என்று பெயரிட்டனர்.

ஆலமரத்தின் வளையக்கூடியதும் உறுதி வாய்ந்ததுமான பகுதி, கூடாரங்கள் அமைப்பதற்கும், மாடுகளுக்கு நுகத்தடி செய்வதற்கும் ஏற்றதாய்ப் பல நூற்றாண்டுகளாகப் பயன்படுகின்றது. இதன் இலைகளும் குச்சிகளும் யானைகள் விரும்பித் தின்னும் உணவாகும்.

ஆலமரங்கள் அடர்ந்த சாலைகளைக் காண்பது இந்நாளில் மிகவும் அரிது. அவ்வாறு பார்க்க நேர்ந்தாலும் தம் அங்கங்களான விழுதுகள் பல வெட்டப்பட்டு அவை பரிதாபமாகக் காட்சியளிக்கின்றன. வேறு எந்த மரமும் இதைப் போல் அடர்த்தியாக இலை விரித்து குளுமைநிறைந்த நிழலைக் கடும் கோடையில் நமக்குத் தர இயலாது. வேறு எந்தக் காரணத்திற்காக இல்லாவிடினும் இந்தக் காரணத்திற்காகவே ஆலமரம் நமது அன்புக்கும் பாதுகாப்புக்கும் உரியது.

புனித அரசமரம்

உயர்ந்து வளர்ந்த அடர்த்தியான அரசமரம் பார்த்து ரசிக்கத்தக்க காட்சி. இலேசான காற்றிலும் அரசமரத்தின் அழகிய இலைகள் பம்பரம் சுழலுவது போல அசைந்தாடுவது அழகாக இருக்கும். இலை அசைவால் லேசான குளிந்த காற்று அரசின் அருகில் நிற்கும் நம்மேல் படும். அத்துடன் இலை நுனிகள் உரசிக்கொள்ளும்போது மழைத் தூறல் விழுவதுபோன்ற சரசர வென்ற ஓசையும் கேட்கும்.

மாமுனிவர்களில் பலர் அரசின் அடியில் அமர்ந்து தியானிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். மகான் புத்தர் ஞானோதயம் பெற்றதும் இம் மரத்தின் அடியில்தான். இதையே போதிமரம் "ஞானோதயம் வழங்கிய மரம்" என்று அழைக்கிறோம்.

இந்துக்களுக்கு அரசமரம் மிகவும் புனிதமானது. இதன் வேர்கள் பிரம்மாவைக் குறிக்கின்றன. இதன் அடிமரம் விஷ்ணுவின் அம்சம். இதன் கிளைகள் சிவபிரானைக் குறிக்கின்றன. சின்னஞ் சிறு விதையிலிருந்து இந்த மாபெரும் மரம் உருவெடுப்பதுபோல் இந்த மாபெரும் உலகம் பிரம்மாவினுள் அடங்கியுள்ளது என்று விஷ்ணு புராணம் கூறுகின்றது.

இந்தியக் கிராமப்புறப் பகுதிகளில் திங்களன்று வரும் அமாவாசை தினத்தை அரசமர வழிபாட்டுக்கு ஏற்றதென கிராமப்புறப் பெண்கள் கருதி, அன்று அதன் அடிமரத்திற்கு நீர் ஊற்றி, செம்பு நாணயங்களையும், இனிப்புப் பொருட்களையும் படைக்கின்றனர்.

அரசின் அடியில் நின்று பொய் பேசுவதோ, ஏமாற்றுவதோ ஆபத்தானது, என்ற நம்பிக்கை இருந்து வருவதால் பொதுவாக வியாபாரம் நடக்கும் இடங்களில் அரசமரம் இருக்கக்கூடாது என்று வேடிக்கையாகச் சொல்வதுண்டு. இருந்

தும்கூட கடைகள் உள்ள பகுதிகளில் அரசமரங்கள் இருந்து வருகின்றன. இதன் விதைகள் எங்கெங்கு விழுகிறதோ அங்கே முளைக்கத் துவங்கும்.

சுவர் இடுக்குகளிலும், கூரைப் பகுதிகளிலும், வேறு மரத்தில் உள்ள கிளைகளின் இடுக்குகளிலும் கூட, இதன் விதைகள் விழுந்தால் செடியாக முளைத்துவிடும். இதன் ஆணிவேர் செங்கல், காரை இவற்றுலான கட்டிடங்களையும் ஊடுருவிச் செல்வதால் வீட்டின் அருகில் இதை வளர்ப்பது கட்டிடத்தைப் பாதிக்கக் கூடும். ஆதலால் வீட்டிலிருந்து சற்றுத் தொலைவில் அரசமரம் இருப்பது நல்லது.

அரசின் இலையைப்போல் நுனி கூர்மையாக உள்ள இலை வேறு எந்த மரத்திற்கும் இல்லை. மழைத்துளி அரசிலைமேல் விழுந்தாலும் நுனி வரை ஓடி வந்து உடனே கீழே விழுந்துவிடுமே தவிர, இலையில் தங்காது. ஆகவே இலை உடனே உலர்ந்து விடுகிறது. மரத்தின் வளர்ச்சிக்கு இது மிகவும் நல்லது.



காம்புடன் கூடிய அரசிலை ஆரோக்கியமான ஒரு மனித உடலைப் போன்றது. கழுத்திலிருந்து தோள்கள் இறங்கி, புஜப் பகுதி பரந்து, இடுப்பு சிறுத்து, மனித உடல் அமைந்திருப்பது போலவே அரசிலை அமைந்துள்ளது. ஸ்ரீகிருஷ்ணன் வீற்றிருக்கும் காட்சியை ஓவியங்களில் காணும்போது நமக்கு இந்த உண்மை விளங்கும்.

ஆலமரத்தில் பறவைகளும், பூச்சிகளும் தங்குவதுபோல அரசமரத்தில் தங்குபவை துர்தேவதைகளும், பிராசுகளும்



என்று சொல்லப்படுகிறது. அவைகளில் மிகவும் கொடூரமானது முஞ்சியா என்னும் முனீஸ்வரன். இந்த முனீஸ்வரன் அரசமரத்தில் தங்கிக்கொண்டு அவ்வழியே செல்லும் குதிரை வண்டிகள், மாட்டு வண்டிகள், பஸ்கள் போன்றவற்றைக்

கூடத் தடைப்படுத்தித் தொல்லை கொடுக்குமாம். பாட்டி கதைகளில் கூட அரசமரத்தைப் பற்றி குறிப்பிடும்போது அதன் அடியில் செல்பவர்கள் கொட்டாவி விடக்கூடாது, அவ்வாறு கொட்டாவி விடநேர்ந்தால் வாயைத் துணியால் பொத்திக் கொள்ளவேண்டும், இல்லாவிடில் முஞ்சியா என்ற மூனீஸ்வரன் தொண்டை வழியாகச் சென்று அஜீரணத்தை உண்டாக்கும் என்று சொல்வது உண்டு.

அரசமரத்திற்கு நீண்ட ஆயுள் உண்டு. ஹரித்துவார் அருகே உள்ள அரசமரங்கள் அந்நகரம் தோன்றுமுன்பே தோன்றியவை. அதாவது பதினோராம் நூற்றாண்டில் கட்டின மாயாதேவி கோவிலுக்கும் முன்பாகவே இருப்பவை. கி. மு. 288-ல் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு எடுத்துச் சென்ற அரசமரம் இன்றும் அங்கு நன்றாகவே இருக்கிறதாம்! அதன் வளர்ச்சி பற்றிய குறிப்புகள் இருக்கின்றன. பல நூற்றாண்டுகளையும் கடந்து, நல்ல நிலையிலேயே இருக்கும் அதன் வயது 2257 எனத்தெரிய வருகிறது.

அரச மரத்தை வெட்டுவது மாபெரும் பாவம் என்று கருதப் பட்டது. ஆனால் அரசமரத்தை நடுபவர், தலைமுறை, தலை முறையாக நற்பயன்களைப் பெறுவார் என்று நம்பப்படுகிறது.

நாம் அரசமரத்தை நட்டு நல்ல பெயர் எடுப்பதுடன் நல்ல நிழலையும், காய் கனிகளையும் நிறையக்கொடுத்து வேறுவித தேவைகளுக்கும் உபயோகமாகும் பலவித மரங்களைப் பயிரிட வேண்டும்.

மரங்களே இல்லாத நாடு ஒன்றை நினைத்துப் பாருங்கள்; பாலைவனமாகத்தான் தோன்றும் அது. நன்றாக வளர்ந்துள்ள மரங்களை ஈவு, இரக்கமின்றி வெட்டி அந்த இடங்களில் புதிய மரங்களையும் தோற்றுவிக்காமல் இருந்தால், நாடு, பாலைவனங்கள் மிகுந்ததாகவே ஆகிவிடும்.



மனம் கவரும் மாந்தோப்பு

மாமரத்தை வெட்டுவதற்கு யாருக்குமே மனம் வராது. மாமரம் காட்டில் வளர்ந்தாலும் இனிய ரசத்துடன் கூடிய பழத்தையே தரும். இந்த ரசத்தின் இன்சுவை தேவர்கள் அருந்தும் 'அமுதத்துக்கு ஒப்பாகும்' என்றும் மாங்கனியை 'பழங்களின் ராஜா' என்றும் அழைப்பது வழக்கம். மரத்திலிருந்து பறித்ததும் அப்போதே மாங்கனியை உண்ணலாம். காயாக இருந்தாலும் ஊறுகாய், சட்னி, போன்றவை தயாரிக்கலாம். பழத்தைச் சாறு பிழிந்து, அல்லது உலர்த்தி பப்படம் போல் எடுத்து வைத்துச் சாப்பிடலாம். மாம்பழச் சாறை பாலுடன் கலந்து குடித்தால் மிகவும் சுவையாக இருக்கும். இதன் கொட்டையின் உள்ளே இருக்கும் பருப்பை மாவாக அரைத்து கோதுமை மாவிற்குப் பதிலாக உபயோகிக்கிறார்கள். மாங்கனிகளில் நூற்றுக்கு மேற்பட்ட வகைகள் உண்டு. ஒவ்வொன்றும் தனிச்சுவையோடு இருக்கும்.

மாங்கனியைப் புகழும்போது அதைத் தரும் மரத்தை மறந்துவிடலாமா? கம்பீரமான தோற்றத்துடன் உயர்ந்து, பரந்து நிற்கும் மாமரம், இமாலயச் சரிவிலிருந்து, கன்னியாகுமரி வரை நம் நாடு முழுதும் வளர்கிறது.

குஜராத்தில் ஸாவன் என்று அழைக்கப்படும் ஏழாவது மாதமான ஜூலை—ஆகஸ்டில் பெண்கள் மாங்கன்றைத் தங்கள் வீட்டுத் தோட்டத்தில் நட்டு, தங்கள் குழந்தைகளை வியாதிகள் அணுகாமல் பாதுகாக்கவேண்டும் என்று வணங்கி வருகிறார்கள். மாமரக் கிளை ஒன்றை தனியே பூமியில் ஊன்றி கணேஷ் பூஜையின்போது வழிபடுவதும் உண்டு.

வட இந்தியச் சமவெளியில் நீங்கள் வசித்தால் மாந்தோப்புகளை எங்கும் பார்க்கலாம். பாலைவனச் சோலைபோல் பரந்த வெட்டவெளியிடையே சில இடங்களில் அடர்ந்த மாஞ்சோலைகளைக் காணலாம். அந்த மரங்களின் அருகே ஒரு கிணற்றையும், ஒரு சிறு கோவிலையும் காணலாம்.

இந்த இடங்களில்தான் களைத்த புழுதிபடிந்த உழவன் அமர்ந்து, தன் பகல் உணவை நிம்மதியாக உண்டு, கிணற்றிலிருந்து குளிர்ந்த நீரை எடுத்து அருந்தி இளைப்பாறுவான். அந்த நிழல் தரும் மாமரத்தை யார் பயிரிட்டார்கள் என்று நீங்கள் கேட்டால் அவனுல் பதில் சொல்லமுடியாது. அவன் சிறுவனுக இருந்தபோதே அந்த மாமரம் அங்கே இருந்திருக்கும். ஏன்? அவன் தந்தை சிறுவனுக இருந்தபோதுகூட அந்த மரம் அங்கே இருந்திருக்கலாம். ஆகவே மாந்தோப்புக்கு நீண்ட ஆயுள் உண்டு.

'ஆயிரம் மரத்தோட்டம்' என்று நீங்கள் கேள்விப் பட்டதுண்டா? நீங்கள் கேள்விப் படாமலிருக்கலாம். ஆனல் பிஹாரில் உள்ள ஹசாரி பாக் என்ற நகரின் பெயரைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். நீண்ட காலமாகவே இருந்துவரும் ஆயிரம் மரங்களடர்ந்த மாபெரும் மாந்தோப்பு ஒன்றிற்கு ஹசாரி என்று பெயர். இந்தத்தோப்பைச் சுற்றித் தோன்றிய சிறு கிராமம் நாளடைவில் பெரிய நகரமாக மாறி இன்று 'ஹசாரி பாக்' அதாவது ஆயிரம் மரங்களுடைய தோட்டம் என்ற பொருளில் வழங்கி வருகிறது. அந்நகரின் முதியவர்கள் இந்தக்கதையை உங்களுக்குச் சொல்வார்கள். இன்றும் இந்நகரம் மரங்களால் சூழப்பட்டு காணப்படுகிறது. மாமரம், வேப்பமரம், இலுப்பைமரம், புளியமரம் ஆகியவை அடங்கிய தோப்புகளை இங்கே காணலாம்.

மாந்தோப்பு யாவரையும் வரவேற்கிறது. ஆனல் மாமரம் பழுக்கும் காலத்தில் மாந்தோப்பில் நுழைவது ஆபத்து. இந்தக் காலங்களில் காவல்காரன் பழங்களைப் பாதுகாப்பதில் மிகவும் கவனமாக இருப்பான். மாங்கனிகளைத் தட்டிச் செல்ல வரும் குறும்புச் சிறுவர்களை விரட்டுவதிலே விழிப்புடன் இருப்பான். மாங்கனி மரத்தில் பழுப்பதற்கு முன்பே அதைத் திருடவரும் கிராமத்துச் சிறுவர்களை அவன் விரட்டியடித்துச்



சமாளித்தாகவேண்டும். இது மட்டுமல்ல; பைங்கிளிகள் பறந்து வந்து பழங்களைக் கொத்தி, பழுக்கும் முன்பே நாசம் செய்வதையும் தடுத்தாகவேண்டும். மரத்தின் உச்சியில் ஒரு தகர டப்பாவை கட்டிவைத்து கீழிருந்தபடியே ஒரு கயிற் றைப் பிடித்து இழுத்தால் கலகலவென்று சப்தம் உண்டாகும்.

வாயினுல் சில சமயம் பலமாகச் கூச்சல் போட்டும் மாந் தோப்புக் காவல்காரன் அந்த மரகதப் பச்சைக் கிளிகளை

விரட்டுவான். அவன் கூவும் சப்தம் அந்தச் கிளிகளின் கூச்சலில் எடுபடாது. மாமரத்தின் உச்சிக் கிளைகளில் கிளிக் கூட்டம் வட்ட வட்டமாக உட்கார்ந்துகொண்டு நீண்ட தங்கள் வால்களைத்தொங்க விட்டபடி கூவிக்கொண்டே இருக்கும்.

மாமரம் பழுக்காத காலங்களிலும் கிளிக் கூட்டத்தை நீங்கள் பார்க்கலாம். ஏனென்றால் முதிர்ந்து வளர்ந்த மாமரத்தின் பொந்துகளில் கூடு கட்டி, முட்டையிடும் பருவத்தில் அங்கேயே தங்குவதை தங்கள் வழக்கமாகக் கிளிகள் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.

வேறு சில பறவைகளும் இதே காரணத்திற்காக மாமரத்தை நாடுகின்றன. ஆந்தைக் குஞ்சைக் கூட மாமரத்தின் பொந்துகளில் சில சமயங்களில் நீங்கள் பார்க்கலாம்.

மாங்கனிக்காகவே மாமரத்தை முக்கியமாக வளர்த்தாலும், மாம் பலகைகள் சாமான்கள் அனுப்பிவைக்கும் பெட்டிகள் செய்வதற்கு உபயோகமாகின்றன. மலிவான மேஜை, நாற்காலிகள் செய்வதற்கும், கதவுகள், ஜன்னல்கள் செய்வதற்கும் மாமரம் உபயோகப்படுகின்றது. இந்தியாவின் சில பகுதிகளில் பழத்தோட்டங்களில் மாமரம் பழச் செடிகளுக்கு பந்தல் கால்போல் நின்று உதவுகிறது. அச் செடிகள் பூத்துக் குலுங்கும் போது பூக்கள் மாமரத்தையும் அலங்கரிக்கும். பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும்.

கண்கவர் இலவமரம்

இலவ மரத்தில் சிவப்பு நிறப் பூக்கள் பார்ப்பவர் மனத்தைக் கொள்ளைகொள்ளும். செக்கச் சேவேலென்ற அவற்றின் சிவப்பு நிறம் கண்ணைக் கவரும். நீண்டு உயர்ந்த ஒரு மரத்தில் இலைகளே இல்லாமல் இந்தப் பூக்கள் மட்டுமே இருப்பதாகக் கற்பனை செய்தால் அந்த வசந்த காலக் காட்சி எத்தனை அழகாக இருக்கும் என்று நினைத்துப் பாருங்கள். உலகிலுள்ள வெகு சில மரங்களையே இலவ மரத்தின் இத்தகைய அழகுக்கு இணையாக ஒப்பிடமுடியும்.

இலவ மரத்தை நீங்கள் காடுகளிலும் பார்த்திருக்கலாம். மரங்கள் அடர்ந்த சாலைகளிலும் பார்த்திருக்கலாம். இலையுதிர் காலத்தில் மட்டும் இதன் நிழல் கிடைப்பதில்லையே தவிர மற்ற நாட்களில் நல்ல நிழலைத் தரும். கோடைக் காலத்தில்

இலவமரத்தில் விதைகளைச் சுற்றி வெண் பஞ்சு மூடியிருக்கும். இளந் தென்றலில் பஞ்சு காற்றில் பறந்து, அங்கும் இங்கும் அலைபாய்வதைப் பார்க்கலாம். இலவம் பஞ்சு நூல் நூற்கவும், நெய்து துணியாக்கவும் தகுதியற்றது. ஆனால் தலையணைகள், மெத்தைகள் இவற்றை உருவாக்க இலவம் பஞ்சு மிகவும் உபயோகமாக இருக்கிறது.

மற்ற மரங்களைப் போலவே நாடோடிக் கதைகளில் இலவ மரமும் இடம் பெற்றுள்ளது. மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த முரியாக்கள் என்ற மலைவாசிகள் தங்கள் கிராமத்தின் நடுவில் இலவமரம் ஒன்றை நடுவதை வழக்கமாகக் கொண்டிருக் கிறார்கள். இன்னும் சிலர் இலவ மரத்தால் பந்தல் கால்கள் அமைத்து கல்யாணக் காலங்களில் மணமகளையும், மண மகனையும் அந்தப் பந்தல் வழியாக அழைத்துச் செல்வார்கள். இலவமரத்தால் செய்யப்பட்ட கிளி பொம்மைகளை அத்தகைய கல்யாணப் பந்தல்களில் தொங்கவிடுவார்கள். காடுகளுக்குரிய தேவதை கிளிகள் என்பது அவர்களுடைய நம்பிக்கை.

இலவமரத்தின் பலகைகள் மிருதுவானவை. பொம்மைகள் செய்ய ஏற்றவை. மீனவர்கள் தங்கள் வலைகளைப் பரப்ப இந்தப் பலகைகளை மிதவைகளாக உபயோகிக்கிறார்கள். இலவம் பஞ்சின் கொட்டை கால் நடைகளுக்குச் சத்துள்ள ஆகாரம். இதன் பட்டைகளிலிருந்து கிடைக்கும் ஒரு

விதப் பிசின் ஆயுர்வேத முறையில் மருந்துகள் தயாரிக்க பயன்படுகிறது.

இலவமரத்தின் பூக்கள் சிவப்பு நிறமாக அடர்ந்து காணப் படுவதால் இம்மரம் பூக்கும் காலங்களில் ஏராளமான பறவைக் கூட்டங்கள் இதனை நாடி வரும். சில பறவைகள் இந்தச் சிவப்பு நிறப் பெரிய பூக்களிலுள்ள தேனை அருந்தவே வரு கின்றன. இன்னும் சில இந்தப் பூவினடியில் தேனில் விழுந்து மடிந்துகிடக்கும் பூச்சிகளை உண்ண வருகின்றன. இன்னும் சில இம்மரத்தின் மிருதுவான மரப் பட்டைகளைக் குடைந்து கூடு அமைத்துக்கொள்ள வருகின்றன. ஆக ஓயாமல் நாள் முழுவதும் பறவைக் கூட்டங்கள் ஏதோ ஒரு காரணத்தை முன்னிட்டு இலவ மரத்திற்கு வந்து கொண்டே இருக்கும்.

இலவமரத்தை நாடி வரும் பறவைகளில் காகங்கள் அதி காலையிலேயே வந்து, முதலாவதாகப் பூக்களில் உள்ள தேனைக் குடித்து விட்டு, தம் தொழிலை கவனிக்கச் செல்லும். மைனாக்களும், புல்புல் பறவைகளும், குயில்களும் இந்த மது அருந்தும் விருந்தில் ஒன்றுடன் ஒன்று போட்டியிட்டுக் கொண்டு கலந்துகொள்ளும். இவற்றுடன் அணில்கள் தங்கள் அடர்த்தியான வாலைத் தூக்கிக்கொண்டு உற்சாகத்துடன் தாவிக் குதித்து கிளைகளில் சரசரவென்று ஓடும். இதனால் இலவம் பூக்கள் இளம் தண்டுகளுடன் கீழே உதிர்ந்து ஏராள மாகக் காணப்படும்.

ரோஸி பாஸ்டர் என்ற சிவப்பு நிறப் பறவைகள் ஒவ் வொன்றுக வராமல் கூட்டம் கூட்டமாகவே இலவமரத்தை நோக்கி வரும். அவற்றின் நிறமும் இலவம் பூக்களின் நிறமும் ஒரே மாதிரியாக, எந்த வித்தியாசமுமின்றித் தென்படும். அவை வேடிக்கையாக ஒன்றோடொன்று கூச்சலிட்டபடி தாக் கிக்கொள்வதைப் பார்த்தால் பெரும் போர்க்களமே நடக் கிறதோ என்று தோன்றும். ஆனால் அந்தப் பறவைகளுக்கு அது ஒரு விளையாட்டு!

அனைவரும் நன்கு அறிந்த மற்றொரு இலவமர வாசி, மலைத் தேனீ. இந்தத் தேனீக்கள் இலவமரத்தில் தேன் கூடுகள் கட்டிக்கொண்டு வாழும்.

இலவமரத்தின் நீண்ட கிளை ஐந்தடி நீளம், $2\frac{1}{2}$ அடி அகலம் உள்ளதாக இருப்பதால் பெரிய தேன் கூடுகளைத் தாங்கும் சக்தி பெற்றவை. இந்தத் தேன் கூடுகளில் வாழும் தேனீக்கள் மூன்று வகைப்படும். சோம்பேறி ஈக்களான ஆண் தேனீக்கள், ஓயாமல் முட்டையிடும் பெண் தேனீக்கள்,

பெரிய தேன் கூடுகளை அமைக்கும் வேலையில் ஓய்வின்றி ஈடுபடும் வேலைக்காரத் தேனீக்கள், ஆகியவையே இவை. தேன் மெழுகு, தேன் இவை நிரம்பிய இந்தக் கூடுகள் அங்கு நிரந்தரமாகக்காணப்படும். தேனீ கொட்டினால் விஷத்துடன் கூடிய வலி தாங்கமுடியாது, கடும் கோடையில் மிக அதிகமாக வலி எடுக்கும். ஆனால் காட்டுவாசிகளான கோலர்கள், சந்தலர்கள் எனப்படுவோர்கள் இந்த வலியைப் பொருட்படுத்தாமல் பழக்கம் காரணமாகத் தாங்கும் சக்தி பெற்றவர்கள் ஆனால் காட்டுப் பிரதேசத்திற்குப் புதியவர்களைத் தேனீ கொட்டிவிட்டால் வலி தாங்காமல் தவிப்பார்கள். ஆகவே மனிதர்களையும், மிருகங்களையும் வெகு கடுமையாகத் தாக்கும் இயல்பு படைத்த இந்தத் தேனீக்களைத் துன்புறுத்தாமல் இருப்பது நல்லது.

ஷிகாரிகள் என்று அழைக்கப்படும் வேட்டைக்காரர்கள் இருவர் இந்தத் தேனீக்களிடம் அகப்பட்டுக்கொண்டு தவித்த கதை தெரியுமா? உயர்ந்து, வளர்ந்த இலவ மரத்தின் கிளைகளில் ஒரு டஜனுக்கும் மேலாக பெரிய தேன் கூடுகள் தொங்கிக் கொண்டிருந்தன. இதையறியாமல் அதனடியில் உட்கார்ந்திருந்த இரு ஷிகாரிகளில் ஒருவன் புகை பிடிக்கும் தன் குழாயைப் பற்ற வைத்தான். உடனே குழாயிலிருந்து புகை கிளம்பி மேலே சென்றது; அதனால் பாதிக்கப்பட்ட தேனீக்கள் தம் கூட்டிலிருந்து கீழ் நோக்கிப் பயங்கரமாகப் பறந்து வந்தன. அடுத்த வினாடி அவ்விரு ஷிகாரிகளையும் தேனீக் கூட்டம் சூழ்ந்துகொண்டு கடுமையாகத் தாக்கவே, வலி தாங்கமுடியாமல் கூச்சலிட்டபடி இருவரும் திறந்த வெளியில் சுமார் ஒரு மைல் தூரம் ஓடினர். அங்கே இருந்த ஆறு ஒன்றில் இறங்கி வலிக்கு இதமாக நீரில் மணிக் கணக்கில் மூழ்கி தேனீக்களிடமிருந்து தப்பித்துக்கொண்டனர்.



இரண்டு காட்டு மரங்கள்

காட்டில் வளரும் மரவகை ஆனாலும் நாட்டிலும், நகர்ப் புறங்களில் சால மரத்தையும் இலுப்பை மரத்தையும் பார்க்கலாம். பார்வைக்கு அழகாக வும், அதே சமயம் மிக்க பயனுள்ளனவாகவும் இந்த இரு மரங்களும் இருந்து வருகின்றன.

சால மரம் நகர்ப்புறத்தில் தனியாக வளர் வதைவிடக் காட்டில் தன் சகாக்களுடன் கூட்ட மாக வளரவே விரும்பும். மத்திய இந்தியா, வட இந்தியப் பகுதி மலை அடிவாரங்களிலும், சம





வெளிப் பிரதேசங்களிலும் இம்மரங்கள் வளர்கின்றன. கட்டிடங்கள் கட்டுவதற்கு வட இந்தியாவில் அநேகமாக இந்த மரத்தையே உபயோகிக்கிறார்கள். இதன் உறுதியான மரப்பகுதி மட்டும் தான் உபயோகமாகிறது என்று எண்ணவேண்டாம். இதிலிருந்து வடியும் ஒருவிதப் பிசின், இந்துக்களின் புனிதச் சடங்குகளில் மணங்கமழும் வாசனை பரப்பும் சாம்பிராணியாகவும் பயன் படுகிறது. இந்தப் பிசின், படகுகள், கப்பல்கள் போன்றவற்றில் ஒட்டும் பொருளாகவும் பயன்படுகிறது. இதன் இலை சாப்பிடுவதற்குத் தட்டுபோல் உபயோகமாகிறது. சந்தலர்கள் என்ற பீஹார் வாசிகள் இந்த மரத்தின் இலைகளைப் புதிதாகத் தினமும் பறித்து நீர் அருந்தும் கோப்பைகளாகச் செய்தும், சாப்பிடும் தட்டுகளுக்குப் பதிலாகவும் உபயோகிக்கிறார்கள். சாதம், பருப்பு போன்ற உணவுப் பதார்த்தங்களை இந்த இலைகளில் பரிமாறி வசதியாகச் சாப்பிடலாம். கோப்பைகள் போல் செய்து தாராளமாக நீர் பருகலாம்.

சிவப்பு நிற எறும்புகள் இந்த மரத்தின் சருகுகள், பசுமையான இலைகள் இவற்றைக்கொண்டு அழகிய கூடு அமைத்து வாழும். அந்தக் கூடுகளின் அருகில் சென்று அவற்றைத் தடைப்படுத்தாமல் பார்க்கலாம். தடைப்படுத்தினால் தேனீக்களைப்போல் இந்தச் சிவப்பு நிற எறும்புகளும் கடுமையாகக் கடித்து மிகுந்த வலியை உண்டாக்கும். யானை வேட்டைக்குச் சென்ற ஒரு வேட்டைக்காரன் தெரியாமல் இந்த எறும்புக் கூட்டை மிதித்து, இந்த சிவப்பு எறும்புகளின் கடி தாங்காமல் கதறினான்.

சில் வண்டு என்னும் பூச்சியும் சால் மரத்தில் வசிக்கும். கோடையிலும் மழைக் காலத்திலும் இப்பூச்சி ஓயாமல் ரீங்காரம் செய்யும். ஒரு பூச்சியின் ரீங்காரமே காதைத்துளைக்கும். பல பூச்சிகள் சேர்ந்து கிளப்பும் ஓசையோ? இசைக் கருவிகளைச் சேர்ந்தாற்போலச் சுருதி பல சேர்ப்பது போல இருக்கும். பறவைகள் கூட இந்தப் பூச்சிகளின் ஓசையில் வாயடைத்துப்போய் பேசாமல் உட்கார்ந்து விடும். ஆண் சில் வண்டுப் பூச்சிகளே இவ்வாறு 'பாட்டு' பாடுவதில் வல்லவை. பெண் பூச்சிகள் பாடுவதில்லை. அவை ஊமைகள்.

மத்திய இந்தியாவில் வாழும் ஒருவகை ஜாதியினருக்கு சால மரம் அரச மரத்திற்கு இணையாகப் புனிதமானது. மார்ச் மாத சமயத்தில் மரங்கள் பூத்துக் குலுங்கும்போது விழாக்கொண்டாடுவார்கள். கல்யாணக் காலங்களில் கூட ஒரு மூங்கில் கழியையும் சால மரத்தின் கழியையும் கல்யாணப் பந்தலில் நட்டுவைத்து, அதற்கு வாசனை எண்ணெய்கள், மஞ்சள் ஆகியவற்றைப் பூசி, வணங்குவார்கள். திருமணத்திற்கு விருப்பமில்லாத மணமகனை, மணமகளோ சால மரக் கொம்பின் இலைகளில் ஒன்றைப் பறித்துக் கசக்கி எறிந்து தன் அதிருப்தியைத் தெரிவிக்கலாம்.

கௌதம புத்தரின் அன்னை புத்தரைப் பிரசவிக்கும்போது சால மரத்தின் கிளை ஒன்றைத்தன் கரங்களால் பற்றிக் கொண்டு புத்தரைப் பிரசவித்தாளாம். புத்தர் மறைந்த பொழுது, அவரது புனித உடலின் மீது சால மரங்கள் அக் காலத்தில் திடீரென்று பூக்களைச் சொரிந்து, தம் நிழல் அந்தப் புனித உடலின் மீது படும்படி வளைந்து நின்றனவாம்.

இலுப்பை மரம் பழங்குடியினரிடையே மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

மத்திய இந்தியா, மேற்கிந்தியா முதலிய பகுதிகளில் வாழும் கோண்டாக்கள் போன்ற பழங்குடியினர், பஞ்சம்

ஏற்படும்போது அரிசிக்குப் பதில் இலுப்பைமரத்தின் பூக்களைச் சமைத்து உண்பார்களாம்.

இலுப்பை மரத்தின் விதைகளிலிருந்து கிடைக்கும் எண்ணெய் விளக்கெரிக்கவும், சமைப்பதற்கு நெய்யாகவும்பயன்படுகிறது. இந்த எண்ணெயை சோப் செய்வதற்கும் உபயோகிக்கலாம்.



பழங்குடி மக்களின் வருவாய் குறைவாயுள்ள கோடை காலத் தொடக்கத்தில் இலுப்பை மரம் பூத்துக் குலுங்கும். சாகுபடி மட்டாக இருக்கும் இந்தப் பருவத்தில் இலுப்பைப் பூ திரட்டுவதில் கிராமம் முழுவதுமே ஈடுபட்டிருக்கும். இந்தப் பூக்களைத் திரட்டுவது எளிதாக இருக்கும் பொருட்டு இந்த மரங்களின் அடியிலுள்ள புற்கள் தீயிட்டு எரிக்கப் படுகின்றன. பெண்கள், தங்கள் தலைகளில் கூடைகளை ஒன்றின் மீது ஒன்றாக அடுக்கி எடுத்துக்கொண்டு செல்வார்கள். சிறுவர்கள், துடைப்பங்களை எடுத்துச் சென்று, மேற்கொண்டு பூக்கள் விழுவதற்கு வசதியாக, எல்லா பூக்களையும் சேகரித்த பின் தரையை சுத்தப்படுத்தி வைப்பார்கள்.

இலுப்பை மரம் பூக்கும் குறுகிய காலமான 15 நாட்களில், கிராமவாசிகள், அநேகமாக, காடுகளிலேயே வசிப்பார்கள். பெண்களும் சிறுவர்களும் பூக்களைத் திரட்டும் அதே வேகத்தில், ஆண்கள், அவற்றை எடுத்துச் செல்வார்கள்.

இலுப்பைப் பூவைத் தரையில் உலர்த்திக் காயவைத்தால் அது சுருங்கி, வெள்ளையிலிருந்து பழுப்பாக மாறுகிறது. அவற்றைத் தனியாகவும், சமைத்தும் சாப்பிடலாம். அரிசி உணவுடன் சேர்த்துச் சாப்பிடும்போது ருசி அதிகமாகும். இலுப்பையின் விதைகளை நன்றாக வேகவைத்து சால

மரத்தின் உலர்ந்த விதைகளை வறுத்து இவற்றை அரிசிச் சோற்றுடன் கலந்து சாப்பிடுவது ருசியாக இருக்கும்.

வனவிலங்குகளில் கரடி இலுப்பை மரத்தின் பூக்களை விரும்பித் தின்னும். மனிதனே மிருகமோ மரம் ஏறி இந்தப் பூக்களைப் பறிக்க வேண்டியதில்லை. இந்த மரங்கள் இரவு நேரங்களில் பூத்துக் குலுங்கும். காலைப்பொழுதில் மரத்தடியில் பூக்கள் சொரிந்து கிடக்கும்.

வானுயர்ந்த பனை மரங்கள்

நீலக்கடலின் நுரை ததும்பும் அலைகளின் அழகை ரசித்துக்கொண்டே, இந்து மாக்கடலின் கரையோரமாக நடக்கும் போது அநேக தென்னை, பனை, பாக்கு, பேரீச்சை மரங்களைப்



பார்க்கலாம். பெரிய பெரிய கருஞ்சிலந்திகள் ஆகாயத்தை நோக்கித் தாவ முயலுவதுபோல இம்மரங்களின் ஓலைகள் காற்றில் அசைவது பார்க்க வேடிக்கையாக இருக்கும்.

காற்றின் வேகம் அதிகமானால் இந்த மரங்களின் கிளைகள் மிகவும் வளைந்து பூமியைத் தொடுவதுபோல் குனியும். பெருங் காற்றில் தென்னை மரத்தின் கிளைகள் மற்ற மரங்களை விட வளைந்து, தாழ்ந்து பூமியைத் தொடுவதுபோல் காட்சிதரும்.

நன்கு வளர்ந்த இந்த வகை மரக்கூட்டங்களைப் பார்த் தால் ஆகாயத்திலிருந்து பூமியை நோக்கி அம்புகள் எய்து வது போலத்தோன்றும் என்கிறார் ஒரு தாவர இயல் நிபுணர். ஆனால் இந்த அழகு மரங்களின் ஓலைகளைக் குடிசைகள் கட்டு வதற்கோ எரிப்பதற்கோ மனிதர்கள் வெட்டிச் சென்று விட் டால் இந்த மரங்கள் அழகு இழந்து விடுகின்றன.

இந்தியப் பனைமர வகையைச் சேர்ந்த நான்கு முக்கிய மரங்கள் தென்னை மரம், பனை மரம், பேரீச்ச மரம், பாக்கு மரம் ஆகியவையாகும். ஒவ்வொன்றும் அதன் உபயோகத்திற் கேற்றபடி சிறப்பாகக் கருதப்படுகிறது. ஒன்று பழத்திற்காக வும், மற்றொன்று இளநீருக்காகவும், ஆனால் நான்குமே கயிறு நார் இவற்றுக்காகவும் பயன்படுகின்றன. இந்தியாவுக்கு 1583 ல் வந்த ஆங்கிலேய யாத்ரீகன் ஒருவன் முதல் தட வையாகத் தென்னை மரத்தைக் கண்டு வியந்துபோய் "அந்த மரம் வருடம் முழுதும் காய்க்கிறது. ஆனால் பேரீச்ச மரத் தைப்போல் சிறு காயல்ல; இதன் காய் மனிதனின் மண்டை யைப்போல் இருக்கிறது" என்று தன் நாட்டிற்கு எழுதினானும்.

இந்தியர்களுக்கு நீண்ட நாட்களாகவே புராண வாயி லாகத் தேங்காயைப் பற்றி நன்கு தெரியும். அராபிய மாலுமி களும் வணிகர்களும் தேங்காயை 'இந்தியக் கொட்டை' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கி. பி. 13 ம் நூற்றாண்டில் மேற்குக் கடற்கரைப் பக்கம் வந்த மார்க்கோ போலோவும் தேங்காயைப் பார்த்து, 'இந்தியக் கொட்டை' என்று சொன் னாராம். முதன் முதலாகத் தேங்காய் எங்கு தோன்றியது என்பது யாருக்கும் தெரியாது. ஆனால் மனிதர்கள் அதை எல்லாப் பகுதிகளுக்கும் எடுத்துச் சென்றிருக்கிறார்கள். பழங் காலத்தில் தமிழ்நாட்டினர் கடல் வாணிபம் செய்தபோது வங்கப் பிரதேசத்து மாலுமிகளுடன் சேர்ந்து கப்பல் மூலம் தென்கிழக்கு ஆசியா வரை தேங்காயை எடுத்துச் சென்றிருக் கிறார்கள்.



தேங்காய்ப் பண்டிகை என்பதாக ஆவணி மாதப் பௌர்ணமியன்று கொண்டாடுவது வழக்கம். மக்கள் ஆயிரக் கணக்கில் கடற்கரைக்குச் சென்று முழுத் தேங்காயைக் சமர்ப்பணம் செய்வார்கள். மீனவர்கள் தங்கள் வாழ்க்கை மேம்பட கடல் தேவதையை வேண்டிக் கொண்டு, இந்தத் தேங்காயுடன் பூ, பழம், பால் இவற்றையும் சேர்த்து, கடலுக்கு அளிப்பார்கள். நீர் நிறைந்த ஒரு மண் பானையின் வாயின்மேல் ஒரு முழுத் தேங்காயை வைத்து அதை வருணனைப் பாவித்து பூஜை செய்வார்கள்.

தென்னையைப்போல் மிகவும் உபயோகமாகும் மரம் வெகு சில தான். இதன் ஈர்க்குகளினால் துடைப்பம் செய்யலாம். இதன் பாளையிலிருந்து வடியும் நீர் கள்ளாகிறது, அதிலிருந்து இனிப்பான வெல்லம் செய்யவும் முடிகிறது. தேங்காயின் நார் கயிறு திரிக்க உபயோகமாகிறது. சுவையோடு கூடிய இதன் நீர் (இளநீர்) தாகத்தைத் தணிக்கும், முற்றின தேங்காய் கொப்பரை எனப்படும். கொப்பரையிலிருந்து கிடைக்கும் எண்ணெய் தேங்காய் எண்ணெய் ஆகும். தேங்காயின் வழுக்கை உண்பதற்கு மிகவும் சுவையானது; சத்து நிரம்பியது கூட.

மிகவும் பயனுள்ள தென்னை மரத்திற்கு அடுத்தபடி, மிகவும் உபயோகப்படுவது பனை மரம். காகிதம் கண்டு பிடிக்கப்படுமுன் விசிறிபோன்ற இதன் ஓலைகளில்தான் எழுதிவந்தார்கள். இந்துக்களும், பௌத்தர்களும் தங்கள் புனித நூல்களை முதலாவதாகப் பனை ஓலைச் சுவடிகளில்தான் எழுதி வந்தார்கள்.



பனை மரத்தின் பகுதிகள் தென்னை மரத்துக்குச் சளைத்தவை அல்ல. பனை மரத்தின் ஓலை கூரை வேய்வதற்கும், அடி மரம் குடிசையின் உத்திரமாகவும் பயன்படுகிறது. இதிலிருந்து இறக்கப்படும் புளிக்காத சுவையான நீருக்கு பதனீர் என்று பெயர். இதை நீரா என்றும் அழைப்பதுண்டு.

பாக்கு மரத்தைப் பற்றி எல்லோருக்கும் தெரிந்திருக்கும். இந்தியக் கடற்கரை ஓரங்களில் பாக்கு மரம் அதிகமாகப்

பயிரிடப்படுகிறது. மெல்லியதாகவும், உயர்ந்தும் வளரக் கூடியது பாக்குமரம். பாக்கு மரத்தின் மேல் இளைஞர்கள் விரைவாக ஏறிவிடலாம். பாக்கு மரங்கள் ஒன்றையொன்று நெருங்கி அடர்ந்து வளரும். அதனால் இதன் மேல் ஏறுபவர் ஒரு மரத்திலிருந்தபடியே மறு மரத்திற்கு தாவி பாக்கைச் சேகரிக்கலாம். தென்னை மரத்தைப்போலவோ, பனை மரத்தைப்போலவோ காய்களைச் சேகரிக்க மரத்திலிருந்து இறங்கி, மறு மரத்திற்கு ஏறவேண்டிய அவசியமில்லை. பாக்கு மரத்தை மிகவும் கவனமாகப் பயிரிடவேண்டும்.

இந்தியப் பேரீச்சமரம், தோட்டங்களில் பயிரிடப்பட்டால் தோட்டத்திற்கே அழகு தரும்படி நேர்த்தியாக வளரும். பொன் நிறத்தில் குலை குலையாகப் பேரீச்சம் பழங்கள் காய்த்துத்தொங்கி சூரிய ஒளியில் மின்னுவதைப்பார்க்க அழகாக இருக்கும். இந்தப் பழங்களை பறவைகள் விரும்பித்தின்னும்.

பேரீச்சமரத்திலிருந்து கிடைக்கும் சுவையான பானம் ஒருவித சர்க்கரை செய்ய உதவுகிறது. கடலோரங்களில் மட்டுமல்லாமல் உள் நாட்டிலும் பேரீச்சமரம் வளரும். இமாலயப் பகுதிகளில் 'மீனின் வால்புறம்' எனப்படும் பேரீச்சமரத்தைப்பார்க்கலாம். இதன் இலைகள் மீனின் செதில்கள்போல் காணப்படும். இதன் சுருங்கிய இலைகளை விரித்தால் இந்த வகை மரங்களின் இலைகள் எல்லாவற்றையும் விடப் பெரிதாக இருக்கும். மரம் இளமையாக இருக்கும்போது இந்த இலைகள் இதற்கு அழ

கைத் தருகின்றன. மரம் முதுமையடைந்ததும் வயோதிக மனிதனின் வழுக்கைத் தலையைப்போல் இந்த மரமும் மொட்டையாகக் காட்சி தருவதால் இதனை யாரும் விரும்பமாட்டார்கள்.

பேரீச்ச மரத்தின் நாரிலிருந்தும், கயிறுகள் செய்யலாம். ஐவ்வரிசையைப்போன்று ஒரு மாவுப்பொருளும் இதிலிருந்து கிடைப்பதால் மலைவாசிகள் இதைப் பஞ்சகால உணவாகக் கொள்கிறார்கள்.



தேவதைகள் வாழும் மரங்கள்

இந்திய மரங்களைப் பற்றி குறிப்பிடும்போது அவற்றில் வாழும் தேவதைகளைப் பற்றியும் அவசியம் குறிப்பிடவேண்டும். வேப்பமரமும், புளிய மரமும், மாதுளை மரமும், சம்பக மரமும் இவ்வகையில் முக்கிய மானவை.

மழைக் காலத்தில் வேப்ப மரத்தின் சிறு பூக்கள் நிலத்தில் விழுந்து, மணம் பரப்புவதுடன், ஆரோக்கியத்தையும் அளிக்கும். பல நாட்களுக்கு இந்த மணம் காற்றில் இருக்கும். இதற்குக்காரணம் மற்ற மரங்களைவிட வேப்பமரம் அதிகமான பிராணவாயுவை வெளிவிடுகிறது. வேப்பமரம் காற்றைத் தூய்மைப்படுத்துகிறது; அதன் இலைகளும், பட்டைகளும், சாறும் மருந்து குணமுடையவை என்று முனிவர்கள் கூறியது முற்றிலும் பொருத்தமாகும். வேம்பு, இன்றளவும் மருத்துவத் தன்மைபெற்றது எனக் கருதப்படுகிறது.

ஆதி நாளிலிருந்தே நோய்களைத்தீர்க்கும் தெய்வங்களுடன் வேப்ப மரத்தை ஒப்பிட்டுள்ளனர். குறிப்பாக அம்மை நோய்க்கு உரிய தேவதையின் விருப்பமான மரமாக இது கருதப்படுகிறது. அம்மை நோய் கண்ட குழந்தைகளுக்கு வேப்பிலையை கொத்தாகக் கட்டி, குழந்தைகள் மீது வேப்பங் காற்று படும்படி லேசாக வீசுவது வழக்கம். வேப்பமரம் தேவர்களுக்குரிய அமுதத்துளியிலிருந்து உருவானது என்ற நம்பிக்கையில் வேப்பிலையை மரத்திலிருந்து பறித்தவுடனேயே மென்று தின்று, நோய்தீர்க்கும் சஞ்சீவியாகவும், மனத்துக்குச் சாந்தியைத் தரக்கூடியது என்றும் கருதி வரும் வழக்கம் உண்டு.

சூரியனுக்கும், வேப்பமரத்துக்கும் சம்பந்தம் உண்டு என்று 'வேப்பமரத்தில் சூரியன்' என்ற கதையிலிருந்து அறிகிறோம்.



சூரிய பகவான் ஒரு பைராகியை விருந்துக்கு அழைத்தான். அந்தப் பைராகி சூரிய ஒளி இருக்கும் போது தான் சாப்பிடுவானே தவிர, அஸ்தமனமாகி விட்டால் உண்ணமாட்டான். சூரிய பகவான் அழைத்த விருந்தில் இருட்டும் நேரம் ஆகியும் உணவு தயாராக வில்லை. தான் பட்டினியாகத்தான் போக வேண்டியிருக்குமோ என்று பைராகி பயந்து விட்டான். ஆனால் சூரிய நாராயணன் பைராகியின் மன நிலையை அறிந்து தான் வேப்பமரத்திலிருந்து இறங்கி வந்து பைராகியின் அருகில் நின்றுகொள்ளவே, சூரிய ஒளி வீசி பகல் போன தோற்றமளித்தது; விருந்து முடியுமட்டும்.

ஆதிகால மனிதர்களுக்கு மரங்களைக்கண்டாலே ஆச்சரியமாக இருக்கும். மரங்கள் வளரும் விதம் - இலைகள் கிளைகள் தோன்றுவதும், அவை பட்டுப்போய் மீண்டும் துளிர் விடுவதும், சின்னஞ்சிறு விதையிலிருந்து மாபெரும் மரம் தோன்றுவதும் - ஆதி மனிதனுக்கு இயற்கை செய்யும் விந்தையிலும் விந்தையான நிகழ்ச்சிகளாகவே தோன்றின.

இத்தகைய விந்தைகள் நிகழ்வதற்கு மரங்களோடு ஏதேனும் தேவதைகள் சம்பந்தப்பட்டிருக்கவேண்டுமென்று கருதி, அந்த மரங்களுக்குப் பக்தியோடு செய்யும் வழிபாடு அவைகளுக்குரிய தேவதைகளைத் திருப்தி செய்யும் என்று, மக்கள் கருதி



வருகிறார்கள். ஒரு மரத்தை வெட்டும் முன் அதனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்வான் ஆதி மனிதன். இரவு நேரத்தில் மரங்களின் கிளை களை அசைப்பது கூட அதில் வாழும் தேவதைகளின் தூக்கத்தைக் கெடுத்துவிடும் என மனிதன் பயந்து வந்தான். மரம் ஒன்றை வெட்ட நேர்ந்தால் உடனே வெட்டின பகுதியின் மேல் நெய் ஊற்றி, "ஓ வன தேவதையே! நான் ஒரு மரத்தை வெட்டினாலும் இதே இடத்தில் ஆயிரமாயிரம் மரங்கள் தோன்ற நீ அருள் புரியவேண்டும்" என்று வேண்டிக்கொள்வான்.

பேரார் மாகாணத்தில் உள்ள ஒரு காட்டில் உள்ள மரங்கள் அனைத்தும் காட்டை அடுத்துள்ள நகரக் கோவில் ஒன்றுக்கு, சமர்ப்பிக்கப் பட்டுவிட்டதால் அங்குள்ள மரங்களை வெட்டுவதற்கு யாரும் துணிவதில்லை. கிருஷ்ண பகவான் பிறந்து விளையாடிய மதுரா நகரத்தின் அருகே உள்ள புனித மரங்களடங்கிய காடு பல நூற்றாண்டுகளாகப் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வந்தது. ஆனால் இன்றோ அந்தக் காடுகளும் அழிக்கப் பட்டு, மனிதர்களுக்கு வீடுகட்டும் இடமாகிக்கொண்டு வருகின்றது. மனிதன் மரத்தை வணங்காவிட்டாலும், அவை தரும் நற்பலன்களுக்காகவாவது அவற்றை அன்போடு நேசித்துப் பாதுகாத்து வரக்கூடாதா?

புளிய மரம் நீண்ட நாட்களாகவே மனிதன் விரும்பி வளர்த்து வரும் மரமாகும். இந்துக்களும், முஸ்லீம்களும்

இதை மிகவும் போற்றி வருகின்றனர். அக்பரின் இராஜ சபையிலிருந்த இசைக் கவிஞர் தான்சேன் காலமானதும், குவாலியரில், அவரது சமாதி மீது ஒரு புளியமரம் வளர்ந்துள்ளது. இன்னும் அதன் இலையைப்பறித்து சுவைத்துத்தின்ருல் இசைக் கவிஞர் தான்சேனைப்போல் குரல் இனிமை பெற்று பாடமுடியும் என்ற நம்பிக்கை இருந்து வருகிறது.

புளிய மரத்தின் இலைகள் புளிப்பான சுவையுடன் சமையலுக்கு ஏற்றவை. புளியம் பழம் சமையலுக்கும், மருந்துக்கும் ஏற்றது. புளியம் விதையை அரைத்து மாவாக்கிப் பசை காய்ச்சி, புத்தகங்களைப் பைண்ட் செய்வதற்கு உபயோகிக்கலாம்.

மக்னோலியா எனப்படும் சம்பக மரம் நறுமணம் பரப்பும் மலர்களை உடையது. இவை சிறிதாகவும், பெரிதாகவும், உயர்ந்தும், கம்பீரமான தோற்றத்துடன் வளரக்கூடியவை. சம்பக மரத்தினுலான சாமான்கள் பளபளப்பாக இருக்கும் பூச்சுப் பூசினுல் மேலும் பளபளக்கும். புனிதச் சடங்குகளுக்குச் சம்பக மரங்கள் உபயோகமாகின்றன.

அகமதாபாத்திலுள்ள ஒரு மகானின் சமாதி அருகே ஒரு பெரிய சம்பக மரம் இருக்கிறது. அதன் கிளைகள் ஒவ்வொன்றி



லும், பெண்களின் கண்ணுடி வளையல்கள் தொங்குகின்றன குழந்தைப் பேறில்லாதவர்கள் தங்களுக்குக் குழந்தைகள் பிறக்கவேண்டும் என்று வேண்டிக்கொண்டு கண்ணுடி வளையல்களை அங்கு காணிக்கை செலுத்துவார்கள். அவர்கள் வேண்டுகோளை மகான் ஏற்றுக்கொண்டு, நிறைவேற்ற விரும்புகிறார் என்றால் அந்தக் கிளைகள் சட்டென்று அசைந்து, அந்த வளைகளைப் பற்றிக்கொண்டு, தாமே அணிந்துகொள்ளுமாம்.

பலாசமரம் எனப்படும் செக்கச் சிவந்த பூக்களோடு கூடிய அழகிய மரத்துக்கு தாக் என்றும் பெயர் வழங்கப்படுகிறது. பிளாசி யுத்தபூமிக்கு இம்மரங்களை ஒட்டித்தான் பெயர் ஏற்பட்டது.



பலாசமரம் பூக்க ஆரம்பித்ததும் இலைகளை உதிர்த்து விடும். செக்கச் சிவந்த ஆரஞ்சு வண்ண நிற முடைய இதன் மலர்கள் கிளைகளை முழுவதுமாக அலங்கரிக்கும். ஹோலிப் பண்டிகையின் போது வர்ணங்களைப் பீச்சும் வேடிக்கைகளில் ஈடுபடுவோர்க்கு இதன் பூக்களும் வண்ணச்சாயமாக உபயோகமாகிறது. பலாசமரத்தின் சுள்ளிகள் புனிதச் சடங்குகளுக்கு அக்கினி குண்டம் வளர்க்க உபயோகமாகின்றன.

பாபுல் அல்லது கீகார் எனப்படும் மரம் பார்ப்பதற்கு கவர்ச்சியற்றதாக இருந்தாலும், இதன் பட்டைகளும், அடி மரமும் மிகவும் உபயோகமாகின்றன. இந்த மரம் எங்கும் வளரும். பாலைவனங்



கள், சதுப்பு நிலங்களிலும் வளரும். பாபுல் மரத்தின் அடிமரம் உறுதியானது. நீண்ட நாள் உழைக்கக்கூடியது. வண்டிச் சக்கரங்கள் செய்யவும், கிணற்று கைப்பிடிச் சுவர்களுக்கும், எண்ணெய் செக்கு, அரவை இயந்திரங்களுக்கும், அரிசி தீட்டவும், உழவுக் கருவிகள் செய்யவும் பாபுல் மரம் ஏற்றது. இதன் விதைகள் கால் நடைகளுக்கு ஏற்ற உணவு.

ஒவ்வொரு மரமும் ஒவ்வொரு விதத்தில் பழங் கதைகளிலும் சிறப்புற்று இருப்பதால் ஆதிகால மனிதன் வாழ் நாளிலிருந்து, அவை இருந்து வருவது தெரிகிறது. அந்த மரத் தேவதைகளின் கோபத்தைத் தவிர்க்க, எங்கெங்கெல்லாம், எத்தனை எத்தனை வகை மரங்களை, எவ்வளவு அதிகமாகப் பயரிடமுடியுமோ, அவ்வளவிற்குப் பயிரிட்டு, பாதுகாத்து, அம்மரங்களில் வாழும் தேவதைகளின் மனம் குளிரச் செய்வோமாக!

இமயத்தின் மரங்கள்

இந்தியச் சமவெளிப் பிரதேசத்தில் காணப்படும் மாமரம், வேப்பமரம், பாபுல்மரம், புளியமரம், இலவமரம் போன்ற ஒன்றைக் கூட மலைப்பிரதேசத்தில் வேறுபட்ட தட்ப வெப்பநிலை காரணமாக காணமுடிவதில்லை. அவற்றிற் குப் பதிலாக கடல் மட்டத்திலிருந்து 600 அடி உயரத்தில் உள்ள மலைப் பிரதேசங்களில் தேக்கு மரமும், தேவதாரு மரமும், கருங்காலிமரமும் ஈட்டிமரமும் அடர்ந்து அழகாக





வளர்கின்றன. தேவதாரு என்ற பெயர் வட மொழிச் சொல்லாகும். இந்த மரம் தெய்வீகத் தன்மை உடையதாகக் கருதப்படுகிறது. இமாலயப் பிரதேசத்தில் அதிகமாக வளரும் இந்த மரங்களின் அடியில் வசிப்பவர்களுக்கு இறைவன் ஏன் இந்த மரத்தை விரும்புகிறான் என்பது புரியும். இமயமலைச் சாரலில் தேவதாருமரம் தனித்தும், மற்றும் பைன் மரங்களுடன் சேர்ந்தும் வளருகிறது. தேவதாருமரம் பார்ப்பதற்கு அழகோடு இருப்பதுடன் உறுதியும், எடுப்பான தோற்றமும் உடையது. இமாலயப் பனி இந்த மரத்தின் கிளைகளிலும் படிந்து, இதற்கு மேலும் அழகூட்டும் காட்சி பார்த்து ரசிக்கத் தக்கது. காற்று இம்மரக் கிளைகளின்மீது பட்டுச் செல்லும்போது கிளைகள் அசைந்தாடுவதால் ஏற்படும் ஒலி தேவகானம்போல் காதில் ஒலிக்கும். இறைவனுக்கு இது விருப்பமாய்த்தானிருக்கும்.

பைன் மரம்போல் மணம் பரப்பாவிடினும், இன்னிசையை இது எழுப்புகிறது. மரங்கள்



நடக்க முடியுமானால், தேவதாருமரம் நிமிர்ந்தபடி கம்பீரமாக நடந்து செல்லும் காட்சி அழகிய காட்சியாக இருக்கும். பட்டாளம்போல் தேவதாரு மரக் கூட்டம் மலைமீது நடந்து செல்வதை எண்ணிப்பாருங்கள்.

உறுதியான மரவகைகளில் தேக்கு, கருங்காலி, தேவதாரு மூன்றும் முக்கியமானவை. இதில் தேவதாரு மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. கட்டிடங்களுக்கும், ரயில் தண்டவாளங்களுக்கு அடியில் போடப்படும் கட்டைகளுக்கும், இந்த மரத்தின் பகுதிகளே அதிகமாக உபயோகமாகின்றன. பைன் வகை மரத்தின் மரப்பகுதி, இதைப்போல் உறுதியானதல்ல. ஆனால் பைன் மரம் அதிக அளவு ஒருவகை ஒட்டும் பிசினை டர்பன்டைன் தயாரிப்பதற்கு ஏற்றதாக அதிக அளவில் தருகிறது. வட இந்தியா முழுதும் விருப்பப்படுகிற சில்கோசா என்ற பழம் இந்தப் பைன் மரத்திலிருந்தே கிடைக்கிறது.

கருங்காலிமரம் பைன், தேவதாரு மரங்களைப் போன்று அழகாக இல்லாமல் வளைந்து, பல்வேறு திசைகளில் கிளை விட்டு, குட்டையாகக் கவர்ச்சியின்றி வளரக்கூடிய மரம். விறகுக்காக இதன் கிளைகளையும் வெட்டிவிட்டால் அப்போது இம்மரத்தின் தோற்றம் இன்னும் குரூரமாக இருக்கும். இருந்தும் பறவைகளும், பூச்சிகளும் அழகற்ற இம்மரத்தில் கூடு கட்டி வாழ கருங்காலிமரம் பெருந்தன்மையுடன் இடமளிப்பதைப் பாராட்டவேண்டும். மரத்தில் வாழும் பூச்சிகளையே குடைந்து தின்னும் மரங்கொத்திப் பறவை அநேகமாக கருங்காலி மரத்தையே தேடிவந்து, அதன் பட்டைகளை ஓயாமல் டக் டக் என்று கொத்திக் குடையும் சப்தம் மலைப் பிரதேசங்களில் கேட்பதுவழக்கம். நீலநிற நீண்ட வாலுடன் கூடிய ஊர்க்குருவிக் கூட்டங்கள் வேகமாகப் பறந்துவந்து, கருங்



DR T P. M. LIBRARY.
MADURAI KAMARAJ UNIVERSITY

காலி மரக் கிளைகளில் அமரும்போது ஏற்படும் ஓசை, ஒரு ஹெலிகாப்டர் வேகமாக வந்து மரத்தில் அமருவதுபோல் இருக்கும்.

கருங்காலி மரத்தில் அநேகமாக ஆண்டு முழுதும் பச்சைக் கிளிகளும், வெள்ளை கன்னம் கொண்டைக் குலாத்திகளும், வால் முளைச்சான் குருவிகளும் இனிமையான குரல் எழுப்பி கீரிச்சிட்டுப் பறந்து விளையாடியவாறிருக்கும். தவிர, வருடம் முழுவதும் அக்கூ பட்சியின் பிசிறில்லாத இனிய கூவல் கேட்டவாறிருக்கும். இக்கூவல் ஒவ்வொரு முறையும் அரைகுறையாக

நிற்பது போலிருக்கும், பட்சி தான் சொல்ல வந்ததைப் பாதியில் மறந்து விட்டதுபோல.

பச்சைக் கன்னன் என்ற மற்றொரு பறவை தேவதாரு மரத்தின் உச்சிக் கிளையில் உட்கார்ந்துகொண்டு, வானத்தை நோக்கி ஓயாமல் கத்தியபடி இருக்கும். இதன் சோக கீதம் கேட்பவர் உள்ளத்தை உருக்கும். இதற்கு மலைவாசிகள் கூறும் கதை என்ன தெரியுமா? வட்டிக்குப் பணம் கொடுக்கும்

ஒருவன் தனக்குச் சேரவேண்டிய கடன் பணத்துக்குத் தொடுத்த வழக்கு தோற்றுவிட்டதால் அவன் அந்த அதிர்ச்சியில் உயிரிழந்துவிட்டான். மறு பிறவியில் அதே வட்டிக் கடைக்காரன் இந்தப்பட்சியாக உருவெடுத்து, வானத்தை

நோக்கி உருக்கமான குரலில் "அநீதி; அநீதி" என்று அலறுகிருனும்.

மழைக் காலத்தில் கருங்காலி மரத்தின் அடிமரத்தைச் சுற்றி ஏராளமான முட்புதர்கள் காணப்படும். இந்த முட்புதர்களின் பூக்களும் அழகாக சிவப்பு நிறமாக இருக்கும். தவிர, ஐரோப்பாவில் புதராக வளரும் ஒரு செடி இமாலயப் பிரதேசத்தில் மரமாக வளர்கிறது. பூக்கும் காலத்தில் இம்மரத்தின் பூவிதழ் மலைப்பிரதேச காடுகளில் மெத்தை விரித்தாற்போல் உதிர்ந்துகிடக்கும். மலைவாசிகள் இப்பூக்களைச் சேகரித்துத் துவையல் அரைத்துச் சாப்பிடுவார்கள். இப்பூக்களிலுள்ள தேனைப்பருக கருநிற புல்புல் கொண்டைக் குலாத்திகள் நிறைய வரும்.

ஆப்பிள் பழம், பியர், ஆப்ரிக்காட், பீச், ப்ளம் செர்ரி, வால்னட்போன்ற மலைப்பிரதேசப் பழங்களுக்கு இங்கு பஞ்சமே இல்லை. வால்னட் மரம் மொட்டைமரமாக நின்ருலும் கூட அழகாக இருக்கும். இமாலயப் பிரதேசத்தில் வளரும் தேவதாரு மரத்தைப்போல் இதுவும் ஒன்று. ஆப்பிள் சுமார் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு இங்கிலாந்திலிருந்து கொண்டுவரப்பட்டு பயிரிடப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இப்போது மலைச்சரிவிலுள்ள எல்லாப் பகுதிகளிலும் ஆப்பிள் ஏராளமாக வளர்கிறது.

ஆண்டுதோறும் மார்ச் மாதம் வரை இருக்குமிடம் தெரியாமல் இருந்துவரும் ஆப்பிள் மரம் ஒரே இரவில் வெண் பூக்களைச் சுமந்தபடி பூத்துக் குலுங்கும் காட்சி நமக்கு விந்தையாக இருக்கும். உடனே, தேனீக் கூட்டங்கள் ரீங்காரம் செய்துகொண்டு தேன் அருந்த ஆப்பிள் பூக்களைச் சூழ்ந்து கொள்ளும். ஜூன் மாத இறுதிக்குள் மாணிக்கச் சிவப்பு நிறத்திலும், ஆரஞ்சும், பச்சையும் கலந்த நிறத்திலும் குண்டு, குண்டாக ஆப்பிள் ஏராளமாகப் பழுத்துத் தொங்குவதைக் கண்ணுக்கு விருந்தாகக் கண்டு களிக்கலாம்.

மலைப் பிரதேசத்தில் சுமார் பத்தாயிரம் அடி உயரத்தில் ஃபிர் மரங்கள் வெள்ளி நிறத்தில் ஏராளமாக வளர்கின்றன. பன்னிரண்டு ஆயிரம் அடி உயரத்தில் வளரும் மரங்கள், சித்திரக் குள்ளன்போல் சீதோஷ்ண நிலை காரணத்தால் வளர்ச்சி குன்றி காணப்படுகின்றன. அந்தப் பிராந்தியத்தில் வளரும் வேறு சில மரங்களும் உள்ளன. அதையும் கடந்து சென்ருல் ஏராளமான காட்டுப் பூக்கள் வளர்வதையே காணலாம். மலைப் பாறைகளின் இடையே இப்பூக்கள் வளர்கின்றன.



இந்த இடத்தை நாம் அடைந்துவிட்டால் இனி நாம் மரங்களைப் பார்க்கமுடியாது. எங்கு பார்த்தாலும் வெண் பனி மூடிய வெள்ளிச் சிகரங்களைத்தான் காணலாம். பயிர், பச்சை ஏதும் வளராத இந்தப் பகுதி உலகின் கூரையாகக் கருதப் படுகிறது.

164602

DR. T P. M. LIBRARY.
MADURAI KAMARAJ UNIVERSITY.

இந்த வரிசைப் புத்தகங்கள்

பாபு மகாத்மா காந்தியின் வாழ்க்கை வரலாறு– (படங்களுடன் இரு பகுதிகள்)	எழுத்துரை, படங்கள்: எ.ஃப். சி. ஃப்ரெய்ட்டாஸ்
கஷ்மீர்	ஃபோட்டோக்கள்: பி. என். சர்மா எழுத்துரை: மாலா சிங்
பறவைகளைப் பார்	ஜமால் ஆரா
நம் நதிகள் [பகுதி I]	லீலா மஜூம்தார்
நம் நதிகள் [பகுதி II]	அழ. வள்ளியப்பா
இமயச் சிகரங்களுக்கு இடையில்	பிரிகேடியர் கியான் சிங்
தேவலோக யாத்திரை முதலிய சில கதைகள்	லீலாவதி பாக்வத்
சிரித்துச் சிந்திக்கச் சில கதைகள்	மனேஜ் தாஸ்
சுயராஜ்யத்தின் கதை	விஷ்ணு பிரபாகர்
நமது ரயில்வேக்கள்	ஜகஜீத் சிங்
அவர்கள் கண்ட இந்தியா	கே. சி. கன்னு
நாடகம் போடுவோம்	உமா ஆனந்த்
பூனை இனம்	எம். டி. சதுர்வேதி
முன்னொரு காலத்திலே...	எம். சாக்ஸி, பி. எம். ஜோஷி
ரோகந்தாவும் நந்திரியாவும்	கிருஷ்ண சைதன்யா
வீரர் கதைகள்	ராஜேந்திர அவஸ்தி
படாபானி	லீலா மஜூம்தார்
உலகை மாற்றிய புதுப் புனைவுகள் (இரு பகுதிகளில்)	மீர் நஜாபத் அலி
மோரா	முல்க்ராஜ் ஆனந்த்
சோனுவின் பயணம்	தாரா திவாரி
அஞ்சல் தலைகளின் கதை	எஸ். பி. சட்டர்ஜீ
அயோத்தியின் இளவரசன்	ஹன்ஸா மெஹ்தா
காந்தியின் வாழ்விலிருந்து சில கதைகள்	உமாஷங்கர் ஜோஷி
ஒலிம்பிக் விளையாட்டுக்களும் ஒலிம்பிக் வீரர்களும்	மெல்வில் டி'மெல்லோ
சுயராஜ்யத்தின் கதை [பாகம் II]	சுமங்கல் பிரகாஷ்
முன்னொரு காலத்தில் (பாகம் 2)	எம். சோக்ஸி பி. எம். ஜோஷி
எக்காலத்துக்கும் ஏற்ற கதைகள்	சாந்தா ரங்காச்சாரி
மரங்களின் உலகம்	ரஸ்கின் பாண்ட்

விலை ஒவ்வொன்றும் ரூ. 1.50

இவை எல்லா இந்திய மொழிகளிலும் கிடைக்கும்

Rs. 1.50